**Deposition of Witness**

**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 417 of 2022

எ.ம.சா.1 சிங்ஜித்

| | |
|---|---|
| Name | : சிங்ஜித் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 27.11.25 |

சாட்சி அழைப்பாணையின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது தென்காசி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகார கடிதம் மூ.த.சா.ஆ1. அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள அருள்புஷ்பராஜ், த/பெ.சீனித்துரை, 4/142 கிழக்கு தெரு, பெத்தநாடார்பட்டி என்பவரின் ஒட்டுனர் உரிமம் சம்பந்தப்பட்ட விவரங்களை முன்னிலைப்படுத்த உத்தரவிடப்பட்டிருந்தது. எங்களது அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் அந்த நபர்பெயரில் ஒட்டுனர் உரிமம் வழங்கியதாக விபரங்கள் இல்லை. ஒட்டுனர் உரிமம் எண் மற்றும் வழங்கப்பட்ட தேதி குறிப்பிட்டால் அதனை பொறுத்து ஒட்டுனர் உரிமம் சம்பந்தமாக விபரங்களை முன்னிலைப்படுத்த இயலும். டி.என்.67 ஏ.க்யூ.7268 என்ற வாகனத்திற்கு 13.8.2019 வரை மட்டுமே தகுதி சான்று உள்ளது. அதன்பிறகு தகுதிசான்று இல்லை. அந்த தகுதிச்சான்று எங்களது அலுவலகத்தில் மட்டுமே பெற முடியும். வேறு அலுவலகத்தில் பெற முடியாது.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.